[1978 பிப்ரவரி 28

திரு. என். பழனிவேல் : பழனிப் பகுதியைச் சேர்ந்த ஆயக்குடியில் நல்ல முறையில் கொய்யா, மா, பலா போன்ற பழங்கள் ஏராளமாக உற்பத்தியாகின்றன என்பது அரசுக்கு நன்கு தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே அந்தப் பகுதியில் பழங்களைப் பதனிடும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று அங்குள்ள மக்கள் வற்புறுத்தி வருகிறார்கள். ஆகவே அங்கே பழங்கள் பதனிடும் ஒரு தொழிற்சாலையை அமைத்துக் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, எந்த எந்த இடங்களில் பழங்கள் அதிகமாக உற்பத்தியாகின்றன என்கின்ற ஒரு குறிப்பை இப்போது காதி கிராமத் தொழில் வாரியம் தயாரித்து வருகிறது. இது முடிவு செய்யப்பட்ட பின்னால் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை எங்கெங்கு ஏற்படுத்தலாம் என்பதைப்பற்றி வாரியம் முடிவு செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கரூரில் உள்ள நெசவு முதலிய கம்பெனிகள்.

* 320 வினா : திரு. கு. ரமணி : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் நகரில் உள்ள 370 நெசவு, பனியன், சாயக் கம்பெனிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

(இ) அவைகளை திறக்கவும் தொழிலாளர்கள் பிரச்சினைகளைத் தீர்க்கவும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) முதல் (இ) வரை : விபரமான அறிக்கை @ சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் இங்கு வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் கொடுத்திருக்கின்ற விவரங்கள் அல்லாமல் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள், கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் கரூரில் இவர்களுக்குக்

@ 132ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

1978 பிப்ரவரி 28]

கொடுக்க வேண்டிய நூலை மாஸ்டர் வீவர்கள் வேறு இடங்களுக்குக் கடத்திக் கொண்டு போய், மற்ற இடங்களில் விற்பனை செய்து விடுகிறார்கள். இதனால் சாதாரண நெசவாளர்களுக்கு நூல் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இப்படி கடத்திக் கொண்டு போய் நூலை விற்கின்றவர்கள் பேரில் கடுமையான உறுதியான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கரூர் பகுதியில் ஏற்பட்ட பிரச்னை, கைத்தறித் துறைக்கு என்று சில ரகங்களை ஒதுக்குகிறோம். அதே நேரத்தில் விசைத்தறிக்கென்று ஒதுக்கப் படுகின்ற ரகங்களை மீறி விசைத்தறியாளர்களால் தயாரிக்கப்படும் போது, அவற்றைத் தடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதற்கான கோரிக்கைகளை வைத்து வேலைநிறுத்தப் போராட் டங்கள் நடைபெற்றன. விசைத்தறிக்கு இன்னின்ன ரகங்கள் என்று ஒதுக்கிக் கொடுத்து, அதற்கென்று பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டு வேலை நிறுத்தம் திரும்பப் பெறப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் நூல்களைக் கடத்திக் கொண்டுவிற்கப் படுகின்றது என்பது உண்மையல்ல. கைத்தறிக் கென்று ஒதுக்கப் படுகின்ற நூல்களை அவர்களே தங்கள் ரகங்களைத் தயாரிக்க முடியாமல் வேறுவகையில் மறைமுகமாக கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதுபோலவே விசைத்தறிகளுக்கு நூல் கொடுக்கப்படுகிறது.

உதாரணமாக பெட்ஷீட் 47 அங்குலத்திற்கு குறைவாக விசைத் தறிகள் தயாரிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 47 அங்குலத்திற்கு மேல் கைத்தறிகளுக்கு ஒதுக்கப்படுகிறது. இவை களை பின்பற்றுவதில், சில குழப்பங்கள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக வேலைநிறுத்தங்கள், போராட்டங்கள் ஏற்படுகின்றன. இப்போது அரசாங்கம் மிகக் கண்டிப்பாக இருந்து, ஜாக்கிரதையாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால், இதுசம்பந்தமான குழப் பங்கள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10–10]

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, முதல் போராட் டம் ஏற்பட்டது, சமரச ஏற்பாட்டிற்குப் பிறகு அது சரியாக அமுல் நடத்தப்படவில்லை என்ற குறைகள் தொழிலாளர் களிடையே உருவானது, அது சரியாக என்போர்ஸ் செய்யப்பட வில்லை என்பதால். இரண்டாவது நடந்தது. அவர்களிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் சுறாராக அமுல் நடத்தப்படவில்லை என்ப தால், பிராப்பர் என்போர்ஸ்மென்ட், அரேன்ஜ்மென்ட் இதற் காக என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இந்த ரக ஒப்பந்தத்தை கண்டிப்பாக பின்பற்ருவிட்டால் என்ன விதமான நடவடிக்கை எடுப்பது என்பது சட்டத்திலே கூடத் தெளிவாக இல்லை. இருந்தாலும் கூட, கைத்தறி நெசவாளர்களின் நலனைக் காப்பாற்றுவதற்கு கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட ரகங்களை, கைத்தறியிலே தயாரிப்பதற்கு வாய்ப்புத் தராமல் விசைத்தறியிலே தயாரிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, விசைத்தறியிலே 20,000 பெறுமான துணிகளைப் பறிமுதல் செய்து, வழக்குமன்றத்திற்குச் சென்று, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட காரணத்தினுல் இன்றைக்கு அங்கே எந்தவிதமான பதட்ட நிலையும் இல்லாமல், நெசவாளர்கள் ஓரளவிற்கு அமைதியாக வேலை செய்கிருர்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) பார்வையாளர் மாடத்தில் ரகசிய போலீஸ் அதிகாரிகள் (சி. ஐ. டி. க்கள்) இருப்பது குறித்து.

* திரு. துரை முருகன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஏற்கனவே காலரிகளிலும், பார்வையாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் இடங்களிலும் அமர தலைவர் அவர்களிடமிருந்தும், எம். எல். ஏ. க்கள் கொடுக்கும் கடிதங்களை வாங்கிக் கொண்டு வருவதுதான் வழக்கம். ஆனுல், இன்றைக்கு வழக்கத்திற்கு மாருக லாபிகளில் பார்க்கிறேன்; பார்வையாளர்கள் மாடத்திலே பார்க்கிறேன், அங்கேயெல்லாம் சி. ஐ. டி.-க்கள் இடத்தை அடைத்துக் கொண்டு இருக்கிருர்கள். கிட்டத்தட்ட 4 வரிசைகளில் அவர்கள்தான் உட்கார்ந்து கொண்டிருக்கிருர்கள். இன்றைக்கு இவ்வளவு சி. ஐ. டி.க்களின் நடமாட்டம் அதிகமாக இருப்பதற்குக் காரணம் என்ன? அவர்கள் இவ்வளவு ஜரூராக எம். எல். ஏக்களைச் சுற்றிக்கொண்டு இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அறியவிரும்புகிறேன்.